1967 ஜூலை 10]

(இ) ஆமெனில் எந்தெந்த தாலுகாக்களில் வெள்ளத்தால் சாகுபடி பயிர்களும், கதிரும் மூழ்கி விவசாயம் பாதிக்கப்பட்டது?

(உ) அவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன நிவாரணமளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, ஓரத்தநாடு தாலுகாக்கள்.

(உ) 1966-ல் ஏற்பட்ட வெள்ளத்தால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் ஏதும் அளிக்கப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: இப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு வரி வஜா செய்யவேண்டுமென்று அரசாங்கத்திடம் முறையிட்டார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் தீ விபத்துக்கள்

*244 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு ஜில்லாவில் 1966-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரையில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் எததனை?

(இ) அதனால் ஏற்பட்ட மொத்த நஷ்டம் எவ்வளவு?

(உ) தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் தொகை எவ்வளவு?

(எ) அதை அதிகப்படுத்தும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 322.

(இ) ரூ. 3,17,034.

(உ) விபத்திற்குள்ளான ஒவ்வொருவருக்கும் சேதமடைந்த வீட்டை மறுபடியும் கட்டுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு 30 ரூபாய் ரொக்க மானியம் வழங்கப்பட்டது. இழந்த துணிகளுக்காகவும் பாத்திரங்களுக்காகவும் 10 ரூபாய் துணி மானியம் வழங்கப்பட்டது.

(எ) இல்லை.

குமரி மாவட்டத்தில் சங்கு குளிப்பு

* 245 வினா.—திரு. எம். சி. பாலன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் சிறு அளவில் நடைபெறும் சங்கு குளிக்கும் தொழிலை தீவிரப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இல்லை.